**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 283/2021**

**PW-5**

**20.12.2021**

| | |
|---|---|
| **Name** | துளிசிலட்சுமி |
| **Father's Name** | |
| **Village** | கோவில்பட்டி |
| **Taluk** | கோவில்பட்டி |
| **Calling** | முதுநிலை மருத்துவர் |
| **Age** | 46 |

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையாபுரம் அரசு மருததுவமனையில் முதுநிலை மருததுவராக பணியா்ற்றி வருகிறேன் கடந்த 08.07.2021 ந்தேதி பணியிலிருந்த போது மதியம் 1.20 மணிக்கு 40 வயது மதிக்கதக்க விஸ்வநாதன் என்பவரை அவரின் உறவினர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார் அவர்தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் ஒருவர் எட்டையபுரம் பெருமாள்கோவில் அருகே வலது காலில் கல்லால் அடித்ததாக கூறினார் அவரை பரிசோதனை செய்த போது கீழக்கண்ட காயங்கள்,இருந்தன. 1. வலது கால் பெருவிரலில் 1x2x2 செமீ ஆளவில் சிதைந்தகாயம் காயபட்டவரை மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடி மருததுவமனைக்கு அனுப்பி வைத்தோம் அங்கு வழங்கிய சிகிச்சை முடித்து அங்கு வழங்கபட்ட சிகிச்சையின் விவரங்களின்படி அவருககு ஏற்பட்ட காயம் கொடூங்காயம் என்று சான்று அளித்தேன் சிகிச்சையின்போது நான் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ 5 ஆகும்

குறுக்கு விசாரணை

சம்பவ இடம் பெருமாள் கோவில் அருகே நடந்ததாக காயபட்டவர்

சொ்ன்னார்.காயப்பட்டவர் மெடிக்கல் மெமோ மூலமாக சிகிச்சைக்கு மருத்துவமனை வந்தார் என்றா்ல், சரிதான். காயபட்டவருக்கு இரத்தகசிவு இல்லை. இரத்தகசிவு இல்லாததால் அது புதிய காயம் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். காயபட்டவருக்கு சொன்ன நேரத்திற்கு ஒரு மணிநேரம் முன்பாக கூட நான்பார்த்த காயம் ஏற்பட் வாய்ப்புஉண்டு.சிதைந்த காயம் ஒருவர் வாகனத்தில் சென்று அடிபட்டால் கூடஏற்படலாம் .நான்சொன்னதுபோல் சொ்னன தேதியில் அ.சா.1 தனது உறவினருடன் சிகிச்சைக்கு மருத்துவமனை வந்தார் என்றும் அவருக்கு முதல் சிகிச்சை அளித்தேன் என்றும் மேல்சிகிச்சைக்கு சென்றார் என்று சொல்லுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. மேல்சிகிச்சைக்கு அதன் அடிப்படையில் நான் கூறிய கருத்துரை தவறானது என்று சொன்னா்ல சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு./எழுதப்பட்டு
சாட்சிக்கு/ எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்

(ஓம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 283/2021**

**PW-6**

**20.12.2021**

| | |
|---|---|
| **Name** | காமாட்சி |
| **Father's Name** | கணபதி |
| **Village** | விளாத்திகுளம் |
| **Taluk** | விளாத்திகுளம் |
| **Calling** | தலைமைகாவலர் |
| **Age** | 51 |

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.07.21 ந்தேதி 13.30 மணிக்கு நான் காவல் நிலைய பொறுப்பிலிருந்த போது எட்டையபுரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி எட்டையபுரம்அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த எட்டையபுரம்கோட்டை வடக்குதெருவை சேர்ந்த தர்மராஜ் என்பவரின் மகன் விஸ்வநாதன் வயது 45 என்பவரின் AR யின்படி மருததுவமனையில் அவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து அந்த வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 228/21 பிரிவுகள் 294(பி),323,324,506(2) இதச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகும் புகார்வாக்குமூலத்தின் அசலையும் முதல் தகவல் அறிக்கையும் இணைத்து சமூக நீதிமன்றத்திற்கும் அனுப்பியும் மற்ற நகலை சம்பந்தபட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளரின் விசாரணைக்கு வைத்தேன்.

குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் புகாரதாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு சுமார் ஒரு மணிநேரத்தில் வண்டியில் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 08.07.21ந்தேதி இரவு 8.10மணிக்கு நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரிதான். காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டகாரணம் உதவி ஆய்வாளரின் விசாரணையின் போது சொல்லவில்லை. உண்மையில் கொடுக்கபட்ட புகார் மறைக்கபட்டு இவ்வழக்கிற்காக பின்யோசனை செய்து புகார் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொ்ன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொ்ன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எடடையபுரம் அரசு மருத்துவமனை சென்று அ.சா1னை பார்த்து புகார் வாக்குமூலம் வாங்கியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு./எழுதப்பட்டு
சாட்சிக்கு/ எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி